www.padippakam.com



# "இருட்டடிப்புச் செய்யப்பட்ட வர்ணகுலத்தானின் போர்த்துக்கேயருக்கு எதிரான விடுதலைப் போர்"

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

32

சங்கிலி குமாரனைத் தண்டிப்பதற்காக பிலிப் து ஒலிவேரா (Philip de Oliceira) மூன்று போர்த்துக்கேயப் படைப் பிரிவுகளுடனும், 500 பேர் கொண்ட சிங்களப் படைப் பிரிவு ஒன்றுடனும், கொழும்பிலிருந்து கடல் மார்க்கமாகப் புறப்பட்டான். மன்னார் வழியாக பூநகரிக்கு அவனது படை வருவதற்குள் தண்ணீர் இல்லாமல் பெருங் கஷ்டத்தை அனுபவித்துவிட்டது. அத்தோடு அவர்கள் வந்த தோணிகளும் சில பழுதடைந்துவிட்டன.

இதனால் பூநகரியில் தங்கி சற்று இளைப்பாறிக் கொண்டு, பழுதடைந்த தோணியையும் திருத்திவிட்டு, எட்டாவது நாள் அந்தப் படை யாழ்ப்பாணக் கரையை அடைந்தது. அங்கு பாதுகாப்பான ஒரு இடத்தில் முகாமமைத்து படைகளைத் தங்க வைத்த ஒலிவேரா, அதன் பின் நல்லூரிலிருந்த சங்கிலி குமாரனுக்கு, 'தங்களுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பணத்தை செலுத்தும்படி' தூதனுப்பினான்.

சங்கிலி குமாரன் 'தான்திறை செலுத்துவதாக' ஒத்துக்கொண்டான். ஆனால் தன்னிடம் அவர்கள் கேட்கும் முழுத் தொகையையும் செலுத்தப் பணம் இல்லை என்றும், 5,000 பர்தாங்கு பணத்தை விரைவில் செலுத்துவதாகவும், ஒலிவேராவைப் பூநகரியில் சென்று தங்கியிருக்கும்படியும் ஒலிவேரா அனுப்பிய தூதுவனிடம் சொல்லியனுப்பியிருந்தான்.

சங்கிலியின் இந்தச்சொல்லை ஒலிவேரா ஏற்க மறுத்துவிட்டான். சங்கிலி தனக்குப் பொய் சொல்கிறான் என அவனுக்குத் தோன்றியது. அதற்கிடையில் வண்ணார் பண்ணையில் தமிழர் படையொன்று தம்மைத் தாக்குவதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் அவனுக்குத் தகவல் வந்தது. எனவே சங்கிலி குமாரனின் படைகள் மீது தாக்குதல் நடத்த அவன் உத்தரவிட்டான்.

வண்ணார் பண்ணையில் அணிவகுத்து நின்ற தமிழர் படைக்கு 'பரதவர் குல வீரன்' ஒருவன் தலைமை தாங்கியதாக அறியமுடிகிறது. அவனது பெயர் 'வருண குலத்தான்' என்கின்ற குறிப்பு மட்டும்தான் யாழ்ப்பாண வரலாற்று ஏடுகளில் காணக் கிடைக்கிறது.

*****

மகாவம்சம், இராஜவம்சம், சூளவம்சம் முதலான சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் எவ்வாறு பௌத்தப் பாரம்பரியத்தையும், பௌத்த சிங்கள நலனையும் அடிப்படையாக வைத்து பக்க சார்புடன் வரலாற்றை எழுதினார்களோ, அவ்வாறே இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை யாழ்ப்பாண இராட்சியத்தின் வரலாற்றை எழுதியவர்கள் தங்கள் சாதிய நலன்களையும், பார்பணியம் இந்து மதத்தின் நலன்களையும் அடிப்படையாக வைத்தே வரலாற்றை எழுதினார்கள். தமிழர் நலன், தமிழ் தேசிய நலன், அல்லது நடுநிலையான வரலாற்றுப் பார்வை என்பது இரண்டாம் பட்சமாகவே இருந்தது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை சரித்திரச் சுவடிகள் பாதுகாப்புச் சபையில் உறுப்பினராக இருந்துவரும் இங்கிலாந்து - போர்த்துக்கேய, ஒல்லாந்து ஆவணக் காப்பகங்களில் இருந்து தகவல்களைத் திரட்டி யாழ்ப்பாணச் சரித்திரத்தை ஆய்வு செய்து வெளியிட்டவருமான முதலியார் இராஜநாயகம். 'யாழ்ப்பாண வைபவ மாலை' நூலுக்குச் செய்த விமர்சனத்தில் 'யாழ்ப்பாண வரலாற்றை எழுதி வெளியிட்ட பலர் இடைச்செருகல்களாக தமது சொந்தக் கருத்துக்களையும் சேர்த்துவிட்டனர். சிலருடைய கருத்துக்களில் அவர்களது சாதிய நலன்களுக்கேற்ப கருத்துக்கள் திரிக்கப்பட்டிருக்கின்றன' என்று இதை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

யாழ்ப்பாண அரசுடன் சம்பந்தப்பட்ட ஏனையவர்களுடைய பெயர்கள் விலாவாரியாக அவர்களது பட்டங்கள் வரிசை, முதலியவற்றுடன் குறிப்பிடப்படுகிறபோது, போர்த்துக்கேயத் தளபதி ஒலிவேராவை எதிர்த்த 'வருண குலத்தானைப்' பற்றிக் குறிப்பிடும்போது, 'கரையாரத் தலைவன்' என்று மட்டும் குறிப்பிட்டுள்ளதை இந்த அடிப்படையிலேயே பார்க்க வேண்டியுள்ளது.

*****

வண்ணார் பண்ணையில் ஒலிவேராவின் படைகளுக்கும், வருணகுலத்தான் தலைமையில் வந்த தமிழர் படைகளுக்கும் கடும் சமர் நடந்தது. வரணகுலத்தானும் அவனது வீரர்களும் வீராவேசமாக வாட்போர் புரிந்தும், அம்புகளை எய்தும், கவண்களில் கற்களை வைத்து எறிந்தும் ஒலிவேராவின் படைகளில் பலரைக் கொன்று அவர்களை நிலை குலைய வைத்தனர்.

ஆனாலும் தமது படை தோல்வியடைவதைக் கண்ட ஒலிவேரா மேலதிகமாக பீரங்கிப் படையை வரவழைத்து தாக்குதல் தொடுக்க, பீரங்கிக் குண்டுகளின் அகோரத்திற்குத் தாக்குப் பிடிக்காது தமிழர் படை பின்வாங்கியது. தமிழர் படையினரைக் கைது செய்வதற்காக ஒலிவேராவின் படைகள் துரத்தி வந்தன. அவர்களில் போர்த்துக்கேய வீரர்களைத் தவிர மற்றவர்கள் காலில் செருப்பணிந்திருக்கவில்லை. அதனால் நெருஞ்சி முட் செடிகள் நிறைந்திருந்த போர்க்களத்தினூடாக அவர்களால் விரைவாக ஓடமுடியவில்லை. ஆனால் தமிழர் படை முழுவதும் செருப்பணிந்திருந்ததால் ஓடித் தப்பித்துக் கொண்டது.

'இனி அவர்களைத் தேடிப் போவது வீண் வேலை' என எண்ணிய ஒலிவேரா, தனது படைகளை நல்லூருக்குச் சென்று அரண்மனையையும் கைப்பற்றி சங்கிலி குமாரனையும் கைது செய்யும்படி உத்தரவிட்டான்.

'தனது படைகள் தோல்வியடைந்து எதிரியின் படைகள் அரண்மனையை நோக்கி வருவதை அறிந்த சங்கிலி குமாரன், அரண்மனைக்குள் இருந்த இரகசிய வழியினூடாக தனது குடும்பத்துடன் தப்பிச் சென்று கடற்கரையில் தோணியேறி (எந்தக் கடற்கரை என்பது தெரியவில்லை) கோடிக் கரைக்குப் புறப்பட்டான்.

ஆனால் நடுக்கடலில் நங்கூரமிட்டிருந்த ஒலிவேராவின் கடற்படையினர் அவனது தோணிகளை முற்றுகையிட்டுப் பிடித்துவிட்டனர். சங்கிலி குமாரனும் அவனது குடும்பமும் கைது செய்யப்பட்டது. அவர்களிடமிருந்த 8 ஆயிரம் பர்தாங்கு பணமும், ஏனைய அனைத்து நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைதிகளாக கோவாவிலுள்ள போர்த்துக்கேய தேசாதிபதி முன் நிறுத்தப்பட்ட சங்கிலி குமாரனுக்கு விசாரணையில் மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. அங்கிருந்த சிறைமைதானத்தில் அவன் தலை வெட்டிக் கொல்லப்பட்டான். அவனது மனைவிமாரும் மற்ற உறவினர்களும் கன்னியாஸ்திரி மடத்தில் சேர்க்கப்பட்டனர்.

கி.பி. 1620-ம் ஆண்டு இவ்வாறு சங்கிலி குமாரன் கொல்லப்பட்டதும், பிலிப் து ஒலிவேரா கப்பித்தன் மேயர் எனும் பட்டத்துடன், யாழ்ப்பாணத்திற்கு போர்த்துக்கேய தேசாதிபதியாக்கப்பட்டான். அத்துடன் 2,000 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவி வந்த தமிழ் அரசு முடிவுக்கு வந்தது.

இவ்வாறு யாழ்ப்பாண அரசு முடிவுக்கு வந்தபோது ஒலிவேராவுக்கு எதிராகப் போரிட்ட 'வருணகுலத்தானை'யும், சின்ன மீகாப் பிள்ளை ஆராச்சி என்ற பிரதானியையும் தவிர மற்றவர்கள், ஒலிவேராவுக்கு நிலபாவாடை விரித்து வரவேற்று, போர்த்துக்கேயரது ஆட்சியை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக அவனுக்கு உறுதி கொடுத்து தங்கள் முதலியார் பட்டத்தையும், பிரதானிகள் பதவிகளையும் காப்பாற்றிக் கொள்ள முன்வந்தனர். சிலர் ஒருபடி மேலே போய், பரம்பரை பரம்பரையாக தாங்கள் கடைப்பிடித்து வந்த சைவ சமயத்தைக் கைவிட்டு கிறிஸ்தவ மதத்திற்கு மாறி ஒலிவேராவின் விசுவாசத்தைப் பெற முனைந்தனர்.

பரதவர் குலத் தலைவனான வருண குலத்தான் - சங்கிலி குமாரனுக்கு தலை வெட்டியதை அறிந்து துவண்டுபோய்விடவில்லை. போர்த்துக் கேயரின் யாழ்ப்பாண தேசாதிபதி என்கிற பெயரில் தான் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாண மண்ணை ஆக்கிரமித்திருக்கும் ஒலிவேராவிடம் மண்டியிட்டு பதவிகளையோ, சலுகைகளையோ பெறுவதற்கு அவன் விரும்பவில்லை. அந்நியர்களான போர்த்துக்கேயர்களை விரட்டியடித்து, யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் தமிழ் அரசை நிலைபெறச் செய்ய வேண்டும் என்பது அவன் குறிக்கோளாக இருந்தது.

அதற்காக அவன் தஞ்சாவூர் நாயக்க அரசனுடன் தொடர்பு கொண்டான். அவன் அளித்த படையினரின் உதவி கொண்டு, ஒலிவேரா பதவியேற்ற (கி.பி.1620) ஒரு சில மாதத்திலேயே அவனுக்கெதிராகப் போர் தொடுத்தான்.

'வெற்றிமாதா' ஆலயத்தின் முன்றலில் ஒரு முனையிலும், நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் மறுமுனையிலுமாக ஒலிவேராவின் போர்த்துக்கேய ஆட்சிக்கு எதிராக வருண குலத்தான் ஒரே நேரத்தில் இரு முனைகளில் போர் தொடுத்தான். இந்தப் போர் முன்னைய போர்களைவிட உக்கிரமானதாக இருந்தது. ஒலிவேராவின் படைகள் பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி வேட்டுக்களையும், இடையறாது நெருப்பாகப் பொழிந்தபோதும், வருண குலத்தானின் தலைமையிலான தமிழர் படை, ஆக்ரோஷமாகப் போரிட்டது. பலநூறு போர்த்துக்கேய படையினரதும், அதைவிடப் பல நூறு, அவர்கள் பக்கம் நின்ற கூலிப் படையினரது தலைகள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. தங்கள் படைகள் தோற்றுவிடும் என்று அஞ்சி போர்த்துக்கேயப் பெண்கள் எல்லாம், கிறிஸ்தவ தேவாலயங்களுக்குள் புகுந்துகொண்டு யேசு நாதரிடம் தங்களைக் காப்பாற்றும்படி மன்றாடுமளவுக்கு தமிழர் படை போரில் வெற்றிவாகை சூடிவந்தது.

**ஒலிவேராவின் படைகள் பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி வேட்டுக்களையும், இடையறாது நெருப்பாகப் பொழிந்தபோதும், வருண குலத்தானின் தலைமையிலான தமிழர் படை, ஆக்ரோஷமாகப் போரிட்டது.**

ஆனால் துரதிஷ்டவசமாக இரண்டாவது நாள் நடந்த சண்டையில் போர்த்துக்கேயர் ஏவிய பீரங்கிக் குண்டுக்கு வர்ணகுலத்தான் பலியாகிவிட தமிழர் படை தளபதியில்லாமல் பின்வாங்கி ஓடித் தோல்வியைத் தழுவியது.

உண்மையில் யாழ்ப்பாண இராச்சியம் முதன்முதலாக 15-ம் நூற்றாண்டில் சாமமல்குமரையாவால் கைப்பற்றப்பட்டபோது, கனகசூரிய சிங்கையாரியனும், அவன் மகன் சிங்கைப் பரராசசேகரனும் போர் தொடுத்து அதை மீட்டனர். இது இழந்த இராட்சியத்தை மீட்க யாழ்ப்பாண மன்னர்கள் தொடுத்த முதற் போராக இருந்தாலும், இதில் இராட்சியத்தை பறிகொடுத்ததில் சம்பந்தப்பட்ட மன்னர்களே, அதை மீட்பதற்கான போரை தலைமை தாங்கி நடத்தியதால் அதை ஒரு விடுதலைப் போராகச் சொல்ல முடியாது.

ஆனால் மன்னர் குலத்தைச் சேராத, அதே நேரம் அக்கால கட்டத்தில் யாழ்ப்பாண சமூக அமைப்பில் இழிகுலம் என ஒதுக்கப்பட்ட பரதவர் குலத்தைச் சேர்ந்த 'வருண குலத்தான்' அந்நிய ஆக்கிரமிப்பாளனான ஒலிவேராவுக்கு எதிராக நடத்திய போர். யாழ்ப்பாணத் தமிழர்களின் விடுதலைக்கான முதலாவது ஆயுதப் போர் என்னும் தகுதியைக் கொண்டிருந்தது. அந்தப் போரில் அவன் வெற்றியடைந்திருந்தால் மீண்டும் அங்கே மன்னர் ஆட்சிதான் ஏற்பட்டிருக்கக் கூடும். என்றால் கூட, சாமானிய குலத்தைச் சேர்ந்த ஒருவன், மாமன்னர்களை எதிர்ப்பது மாவீரன் நெப்போலியன் காலம்வரை ஐரோப்பியாவிலேயே நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. நெப்போலியன் பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் பிறந்த வருண குலத்தான், அக் கால கட்டத்தில் மிகப் பெரிய காலணித்துவ பேரரசுகளில் ஒன்றாக இருந்த போர்த்துக்கேய அரசை எதிர்த்துப் போரிட்ட செயல் மிகப் பெரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

ஆனால் துரதிஷ்டவசமாக குறுகிய சாதிய நலன்களை அடிப்படையாக வைத்து யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய தமிழ் வரலாற்றாசிரியர்களால் இவனது இந்த வீர வரலாறு பத்தோடு பதினொன்றாக முக்கியமற்ற ஒன்றாக மறைக்கப்பட்டுவிட்டது.

**- நக்கீரன்**